தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, தை 28, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 பிப்ரவரி 11, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியபடி செயலாற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால், அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி அடைவார்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆர். இராசமாணிக்கம் அவர்கள் 14-1-2019 அன்றும் மற்றும் திரு. கி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 16-1-2019 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஆர். இராசமாணிக்கம் அவர்கள் 1985-1988 ஆம் ஆண்டில் அரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1985-1988 ஆம் ஆண்டில் கும்பகோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு,செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1998-1999 ஆம் ஆண்டில் மயிலாடுதுறை மக்களவைத் தொகுதி உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

41—

வேலைவாய்ப்பு வழங்குதல்

***36479—திரு. ஆர். நடராஜ்**:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறப்பாசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.